**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை .திரு.P.சிவஞானம், எம்.ஏ., எம்.எல்,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சீபுரம்.**

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 29 நாள் புதன்கிழமை

**தொழிற்தகராறு எண்.(I.D.) 24/2022**

G.தமிழ்வாணன்,
த/பெ.கணபதி,
எண்.11, 4வது குறுக்குத் தெரு,
மணவாள நகர்,
கே.கே.நகர், ஒன்டிகுப்பம்,
திருவள்ளூர் - 602 002 ...... மனுதாரர் /தொழிலாளர்

/எதிராக/

நிர்வாகம்,
ஸ்விங் ஸ்டெட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
F-71,F72, சிப்காட் தொழிற்பூங்கா,
இருங்காட்டுக்கோட்டை,
திருபெரும்புதூர் தாலுக்கா,
காஞ்சிபுரம் மாவட்டம் - 602 117. ..... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இவ்வழக்கு கடந்த 23.02.2023 அன்று முதல்நிலை விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.C.D.சுகுமார், திருமதி.A.ரேகா மற்றும் திரு.S.சத்ராக் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.T.S.கோபாலன் & கோ மற்றும் திரு.R.கார்த்திக் ஆகியோர்கள் ஆஜராகியும் நடத்தப்பட்ட முதல்நிலை விசாரணையில் ஆவணங்களை பரிசீலித்து இன்று நீதிமன்றம் வழங்கும்,

**முதல் நிலை விசாரணைக்கான தீர்வம்**

1. மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பிட்டராக வேலை செய்து வந்ததாகவும் கடந்த 06.12.2019 தேதியில் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாகவும், அந்த உத்தரவில் எதிர்மனுதாரர் தொழிற்சாலைக்கு தொடர்புடைய வாடிக்கையாளரிடமிருந்து தவறான முறையில் பணம் பெற்றதாக மனுதாரர் மீது புகார் பெற்றதாகவும் குறிப்பிட்டு அத்துடன் காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், அந்த காரணம் கோரும் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் எதிர்மனுதாரரின் வாடிக்கையாளர் திரு.வேல்முருகன் என்பவரிடமிருந்து மனுதாரர் வெளி சந்தையில் மலிவான விலைக்கு கான்கிரீட் பம்ப் வாங்கி தருவதாக ரூ.1,30,000/- பணத்தை பெற்றுக்கொண்டுவிட்டதாகவும் அந்த பணத்தை வாங்கிய மனுதாரர் அதன் பிறகு மேற்படி வேல்முருகன் தொலைபேசியில் அழைத்தாலும் கூட எந்த அழைப்பினையும் ஏற்க மறுத்துவிட்டார் என்றும் அது குறித்து புதுச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக கூறியுள்ளார். அவர் நிர்வாகத்திற்கும் புகார் கொடுத்தன் பேரில் மனுதாரர் மீது குற்றச்சாட்டுகள் சமத்தப்பட்ட நிலையில் சான்றளிக்கப்பட்ட நிலையாணையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரர் மீது ஒழுங்கீன நடவடிக்கையின் பேரில் விசாரணை நடத்த முடிவு செய்து 11.01.2020 தேதியில் உள்துறை விசாரணை குறித்து அறிவிப்பு அனுப்பப்பட்டு விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டதாகவும், அந்த விசாரணை அதிகாரி நிர்வாகத்திற்கு சாதகமாவே செயல்பட்டதாகவும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலத்தினை முறையாக பரிசீலினை செய்யவில்லை என்றும் ஆனால் 17.12.2020 தேதியிட்ட விசாரணை முடிவு அறிக்கையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்ததன் பேரில் அந்த விசாரணை முடிவு அறிக்கையின் நகல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டதற்கு மனுதாரர் உரிய விளக்கம் கொடுத்திருந்ததாகவும் அந்த விளக்கத்தை பரிசிலிக்காத நிர்வாகம் 2வது காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்பு 27.02.2021 தேதியில் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும் அந்த நிரந்தர பணி நீக்கம் சட்டவிரோதம் என்பதாலும் விசாரணை

அதிகாரி மனுதாரர் மீதான விசாரணை சட்டப்படியும், நியாயப்படியும், இயற்கைநீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்படவில்லை என்றும் அந்த விசாரணை முடிவு அறிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பணி நீக்க தண்டனை சட்டவிரோதம் என்பதால் அந்த தண்டனை ரத்து செய்து மீண்டும் பணி வழங்க வேண்டுமென்று கேட்டு மனுதாரர் இந்த தொழிற்தகராறு வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர்மனுதாரர் நிறுவனமானது கான்கிரீட் உபகரணங்கள் தயாரிக்கும் தொழில் செய்துவருவதாகவும், இந்த உபகரணங்கள் அதிநவீன கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்துவதாகவும், பாண்டிசேரியிலிருந்து வேல்முருகன் என்பவர் இந்த நிறுவனத்தின் நீண்டகால வாடிக்கையாளராக இருந்ததாகவும், 19.11.2019 தேதியில் நிறுவனத்திடம் ஒரு புகார் கொடுத்திருந்ததாகவும் அந்த புகாரில் மனுதாரர் Second hand முறையில் கான்கிரீட் பம்ப் ஒன்றை வாங்கி தருவதாக கூறி ரூ.1,30,000/- வங்கி கணக்கு மூலமாக பெற்றுக்கொண்டதாகவும், ஆனால் மனுதாரர் அந்த இயந்திரங்களை வாங்கி கொடுக்கவில்லை என்றும் தொலைபேசியில் தொடர்புகொண்டாலும் எந்த பதிலும் தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்பட்டதன் பேரில் அந்த புகாரின் அடிப்படையில் மனுதாரருக்கு காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டதாகவும் அதற்கு மனுதாரர் கொடுத்த பதில் விளக்க கடிதத்தில் மேற்படி வேல்முருகன் என்பவரிடம் பணத்தை பெற்றுக்கொண்ட விவரத்தை ஒப்புக்கொண்டதாகவும் ஆனால் கடனாகத்தான் பெற்றதாக கூறியிருந்த நிலையில் மேற்படி விளக்கம் திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் அவர் மீதான குற்றச்சாட்டுகளின் பேரில் உள்துறை விசாரணை நடத்த உத்தரவிட்டதாகவும் உள்துறை விசாரணை அதிகாரியாக திரு.அருணாச்சலம் என்பவர் நியமிக்கப்பட்டதாகவும் அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் மனுதாரர் சக தொழிலாளியுடன் கலந்துக்கொண்டதாகவும் விசாரணை முடிவதற்கு முன்பே மேற்படி அருணச்சலம் என்பவர் இறந்துவிட்ட காரணத்தினால் அடுத்ததாக திரு.ஜேசுநாயகம் என்பவர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டதாகவும் ஒவ்வொரு விசாரணை நாளிலும் சக தொழிலாளியுடன்

கலந்துக்கொண்ட நிலையில் நிர்வாகத்தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்ட போது மனுதாரர் அவரை குறுக்கு விசாரணை செய்திருப்பதாகவும், மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தை அளித்த போது நிர்வாகத்தரப்பிலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாகவும், நிர்வாகத்தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களின் நகல்கள் மனுதாரரிடம் கொடுக்கப்பட்டதாகவும், விசாரணை சட்டப்படியும், இயற்கை நீதிக்கு உட்பட்டும் நடத்தப்பட்ட நிலையில் மனுதாரர் தரப்பில் கூறப்படுவது போல் விசாரணை அதிகாரி நிர்வாகத்திற்கு சாதகமாக செயல்பட்டார் என்று கூறுவதற்கு ஆதாரம் இல்லை என்றும் விசாரணையின் போது மனுதாரர் எந்தவித ஆட்சேபனையும் செய்யாமல் இருந்த நிலையில் முடிவு அறிக்கை அவருக்கு எதிராக வந்ததை வைத்து ஒரு பொய்யான குற்றச்சாட்டு கூறியதாகவும், விசாரணை முடிவு அறிக்கையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்திருந்த காரணத்தினால் மனுதாரரிடம் விளக்கம் கேட்டு பெறப்பட்டு குற்றச்சாட்டுகளின் தீவிர தன்மை அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்டார் என்றும் அதனால் அந்த பணி நீக்க உத்தரவை ரத்து செய்யப்பட வேண்டுமென்று மனுதாரர் கோர முடியாது என்று நிர்வாகத்தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா? என்பதை குறித்து முடிவு காண்பதற்காக முதல் நிலை விசாரணைக்கு உத்தரவு செய்யப்பட்டது. இதில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தொ.த.சா.ஆ.1 முதல் 12 வரையிலான ஆவணங்களும் நிர்வாகத்தரப்பில் நி.த.சா.ஆ.1 முதல் 32 வரையிலான ஆவணங்களும் இருதரப்பு சம்மதத்தின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. **மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்துறை விசாரணை முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா? என்பதே தற்போதைய முதல்நிலை விசாரணை தீர்வுக்கான பிரச்சனையாகும்.**

**<u>தீர்வு</u>**

5. இரு தரப்பு கேட்கப்பட்டது. மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பிட்டராக வேலை செய்து வந்துள்ளார். எதிர்மனுதாரர் தொழிற்சாலையானது கான்கிரீட் பம்ப் தயாரிக்கும் தொழில் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் இங்கு வேலை செய்து வந்த காலத்தில் இந்த தொழிற்சாலைக்கு அடிக்கடி வரும் வேல்முருகன் என்பவரிடம் மனுதாரர் பழக்கம் வைத்துக்கொண்டு Second hand முறையில் கான்கிரீட் பம்பை மிக மலிவான விலையில் வெளி சந்தையில் வாங்கி தருவதாக கூறி அதற்கு முன் பணமாக மனுதாரர் SBI வங்கி கணக்கில் 17.04.2019 தேதியில் ரூ.20,000/-மும் 26.08.2019 தேதியில் ரூ.1,10,000/-யும் பெற்றுக்கொண்டதாகவும் ஆனால் மேற்படி வாடிக்கையாளர் வேல்முருகனுக்கு மனுதாரர் Second hand முறையில் கான்கிரீட் பம்பை வெளி சந்தையிலிருந்து வாங்கி தரவில்லை என்றும் ஆனால் பணம் பெற்ற பிறகு மனுதாரரின் தொலைபேசிக்கு தொடர்புக்கொள்ள முயற்சித்தும் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த போது முறையாக பதில் சொல்லவில்லை என்று தெரிவித்து எதிர்மனுதாரருக்கு புகார் கடிதம் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அந்த புகார் கடித நகல் நி.த.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வேல்முருகன் என்பவர் மனுதாரர் மீது புதுச்சேரியில் உள்ள ஆர்லியன்பேட் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை கொடுத்துள்ளார். அந்த புகார் நகல் நி.த.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த புகாரின் பேரில் மனுதாரர் ஒழுங்கீன நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக கருதி 06.12.2019 தேதி முதல் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அந்த பணி இடை நீக்க உத்தரவு நகல் நி.த.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 27.12.2019 தேதியிட்டு மனுதாரருக்கு காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதன் நகல் நி.த.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் மனுதாரர் மீது 3 குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் பணிபுரியும் மனுதாரர் தொழிற்சாலைக்கு தொடர்புடைய வாடிக்கையாளரிடமிருந்து Second hand கான்கிரிட் பம்பை வாங்கி தருவதாக கூறி தவறான முறையில் பணம் பெற்றதாகவும் நிர்வாகத்தின் அனுமதியில்லாமல் வாடிக்கையாளரிடமிருந்து தவறான முறையில் பணம் பெற்றதால் நிர்வாகத்திற்கு பண இழப்பு ஏற்படுத்தியதாகவும், மேலும் நிர்வாகத்திற்கு உண்மையற்றவராக

நடந்துக்கொண்டு நிறுவனத்தின் நன்மதிப்பிற்கு குந்தகம் ஏற்படுத்திவிட்டதாக குறிப்பிட்டு நிர்வாகத்தின் சான்றளிக்கப்பட்ட நிலையாணையில் குறிப்பிட்டுள்ள ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த காரணம் கோரும் அறிவிப்பு கடித நகல் நி.த.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. தனக்கு வாடிக்கையாளர் கடனாக தான் மேற்படி பணத்தை கொடுத்ததாகவும் Second hand கான்கிரீட் பம்பை வாங்கி தருவதாக ஒப்புக்கொள்ளவில்லை என்றும் அதனால் குற்றச்சாட்டுகள் உண்மையில்லை என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாத நிர்வாகம் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் உள்துறை விசாரணை நடத்துவதற்கான அறிவிப்பு கடிதத்தை அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பு கடித நகல் நி.த.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் திரு.அருணாச்சலம் என்பவர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி விசாரணை அதிகாரி திரு.அருணாச்சலம் என்பவர் 20.01.2020 தேதியில் தன்னுடைய முதல் நாள் விசாரணை துவங்கியுள்ளார். அன்றைய தினம் மனுதாரர் விசாரணையின் போது ஆஜராகியுள்ளார். நிர்வாகத்தரப்பிலும் மனிதவள மேலாளர் நிர்வாக பிரதிநிதியாக ஆஜராகியுள்ளார். அன்றைய தினம் மனுதாரருக்கு உதவியாக சக தொழிலாளி பாரதிதாசன் என்பவரும் ஆஜராகியுள்ளார். உள்துறை விசாரணை இயற்கை நீதிக்கு உட்பட்டு நடைபெறும் என்றும் உள் விசாரணைக்கு தொடர்புடைய ஆவணங்களை பெறப்படவும், நிர்வாகத்தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவும், மனுதாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்கவும், மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தை அளிக்கவும், நிர்வாகத்தரப்பில் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் தன்மை உள்ளதாகவும் குறிப்பிட்டு விசாரணை நடவடிக்கை எவ்வாறு நடைபெறும் என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

7. அதன் பிறகு 31.01.2020 தேதியில் மீண்டும் விசாரணை நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மனுதாரரும் சக தொழிலாளி செல்வம் என்பவரும் ஆஜராகியுள்ளார். நிர்வாகத்தரப்பு பிரதிநிதியும் ஆஜராகியுள்ளார். மனிதவள மேலாளர்

தன்னுடைய வாக்குமூலத்தை அளித்து குற்றச்சாட்டுகள் விவரங்களை தெரிவித்துள்ளார். மேலும் நி.த.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார். இந்த ஆவணங்களின் நகல்களை மனுதாரரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நகல்களை பெற்றுக்கொண்டேன் என்று குறிப்பிட்டு மனுதாரர் விசாரணை நடவடிக்கை குறிப்புகளில் கையொப்பம் செய்துள்ளார். அடுத்ததாக 21.10.2020 தேதியில் விசாரணை துவங்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மனுதாரர் ஆஜராகியுள்ளார். சக தொழிலாளியும் ஆஜராகியுள்ளார். அதனால் அன்றைய தினம் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமலும் காலஅவகாசம் கோரப்பட்டுள்ளது. அதன் பிறகு 04.11.2020 தேதியில் நடத்தப்பட்ட விசாரணையின் போது மனுதாரர் ஆஜராகியுள்ளார். சக தொழிலாளியும் ஆஜராகியுள்ளார். அன்றைய தினம் நிர்வாகத்தரப்பு சாட்சியாக வேல்முருகன் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தில் " மனுதாரர் தனக்கு Second hand கான்கிரீட் பம்பை வாங்கி தருவதாக ஒப்புக்கொண்டு ரூ.1,30,000/- வங்கி கணக்கு வாயிலாக பெற்றுக்கொண்டதாகவும், ஆனால் பம்ப் வாங்கி தரவில்லை என்றும் போன் எடுக்கவில்லை. இது குறித்து complaint கொடுக்கப்பட்டது" என்று சாட்சியம் அளித்துள்ளார். அன்றைய தினம் மேற்படி நிர்வாகத்தரப்பு சாட்சியிடம் மனுதாரர் குறுக்கு விசாரணை செய்துள்ளார். அத்துடன் நிர்வாகத்தரப்பில் வேறு சாட்சிகள் இல்லை என்று முடிக்கப்பட்டுள்ளது.

8. இந்நிலையில் விசாரணை அதிகாரியாக இருந்த அருணாச்சலம் என்பவர் 11.11.2020 தேதியில் இறந்துவிட்டதாக குறிப்பிட்டு விசாரணை தொடர்ச்சிக்காக புதிய விசாரணை அதிகாரியாக திரு.ஜேசுநாயகம் என்பவர் நியமிக்கப்படடுள்ளார். ஏற்கனவே விசாரணை அதிகாரியாக இருந்த அருணாச்சலம் என்பவர் நடத்தப்பட்ட விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நி.த.சா.ஆ.7,8,12,14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புதியதாக நியமிக்கப்பட்ட திரு.ஜேசுநாயகம் என்பவர் 18.11.2020 தேதியில் விசாரணை நடவடிக்கை துவங்கியுள்ளார். அன்றைய தினம் மனுதாரர் சக தொழிலாளியுடன் கலந்துக்கொண்டுள்ளார். மனுதாரர் தன்னுடைய எழுத்துபூர்வமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். ஆனால் குறுக்கு விசாரணைக்காக காலஅவகாசம் கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்

25.11.2020 தேதியில் உள்விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் மனுதாரர் ஆஜராகியுள்ளார். அவருக்கு உதவியாக செல்வம் என்ற சக தொழிலாளியும் ஆஜராகியுள்ளார். நிர்வாகத்தரப்பில் அன்றைய தினம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேலும் குற்றம் சாட்டப்பட்டுள்ள மனுதாரர் தரப்பில் மேலும் சாட்சிகள் இருந்தால் தாக்கல் செய்வதற்கு காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 02.12.2020 தேதியில் நடத்தப்பட்ட உள்விசாரணையின் போது மனுதாரர் ஆஜராகி வேல்முருகன் என்பவரிடம் வாங்கப்பட்ட பணத்தை திருப்பி தந்துவிட்டதாக சொல்லி அதன் அத்தாட்சியாக வேல்முருகனின் Bank Statement copy விசாரணையின் போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஸ்டேட்மென்ட் நகல் Ex.D1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் விசாரிக்க சாட்சி ஏதும் இல்லை என்று அத்துடன் விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது. 2வது விசாரணை அதிகாரி நடத்திய விசாரணை நடவடிக்கைகள் நி.த.சா.ஆ.17,19,21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரி முடிவு அறிக்கையின் நகல் நி.த.சா.ஆ.23 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர் ஆரம்பத்தில் விசாரணைக்காக ஆஜராகும் போது விசாரணை நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறும் என்ற விளக்கத்தை கொடுக்கவில்லை என்றும் அதே போல் விசாரணையின் போது சாட்சிகள் கொடுக்கும் வாக்குமூலம் விசாரணை அதிகாரி முறையாக பதிவு செய்யப்படவில்லை என்றும் அதே போல் சாட்சிகள் வாக்குமூலம் விசாரணை அதிகாரி முறையாக பரிசீலினை செய்யாமல் தன்னுடைய முடிவு அறிக்கை வழங்கியிருப்பதாலும் விசாரணை அதிகாரி நிர்வாகத்திற்கு சாதகமாக செயல்பட்டதாகவும் அதனால் விசாரணை நடவடிக்கை இயற்கை நீதிக்கு முரணாக நடத்தப்பட்டது என்று ஆட்சேபனை செய்தார்.

10. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் ஆரம்பத்தில் திரு.அருணாச்சலம் என்ற விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டதாகவும், அவர் மூலமாக நடத்தப்பட்ட விசாரணையின் போது மனுதாரரிடம் விசாரணை எவ்வாறு

நடைபெறும் என்ற விளக்கம் கொடுக்கப்பட்டது என்றும் மனுதாரருக்கு போதுமான வாய்ப்பு வழங்கப்பட்டதாகவும், ஆவணங்களை தாக்கல் செய்ய வாய்ப்பு வழங்கியதாகவும், சாட்சிகள் விசாரிக்கப்படுவதற்கும், குறுக்கு விசாரணை செய்வதற்கும் வாய்ப்பு வழங்கப்படுவதாகவும் தெரிவித்து இயற்கை நீதி கோட்பாடுகள் அடிப்படையில் தான் விசாரணை நடைபெறும் என்று மனுதாரரிடம் விளக்கம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அதே போல் மனுதாரர் ஒவ்வொரு நாள் விசாரணையின் போது சக தொழிலாளியுடன் தான் ஆஜராகினார் என்றும் 2வதாக நியமிக்கப்பட்ட திரு.ஜேசுநாயகம் என்ற விசாரணை அதிகாரியிடம் மனுதாரர் சக தொழிலாளியுடன் ஆஜராகி தன்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்துக்கொண்டு ஆவணத்தை தாக்கல் செய்திருப்பதாகவும் நிர்வாகத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியிடம் மனுதாரர் விரிவான குறுக்கு விசாரணை செய்திருப்பதாகவும் எனவே சாட்சிகள், விசாரணைகள் முறையாக பதிவு செய்யப்பட்ட நிலையில் விசாரணை அதிகாரி நிர்வாகத்திற்கு சாதகமாக செயல்பட்டார் என்றும் நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் நிர்வாகத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் நகல்கள் அப்போதே தரப்பட்டுவிட்டதாகவும் மனுதாரர் தரப்பில் கூறப்படுவது போது விசாரணை நடவடிக்கைகள் இயற்கை நீதிக்கு முரணானது என்பதை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் இல்லை என்று வாதுரை செய்யப்பட்டது.

11. இரண்டு தரப்பினராலும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலிக்கையில் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் தொழிலாளியாக வேலை செய்து வந்த போது எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் வாடிக்கையாளராக இருந்த வேல்முருகன் என்பவர் மனுதாரர் Second hand கான்கிரீட் பம்பை வாங்கி தருவதாக வங்கி கணக்கு மூலமாக ரூ.1,30,000/-வாங்கி கொண்டதாகவும் அந்த தொகையை பெற்ற பிறகு பொருளையும் வாங்கி தரவில்லை என்றும் தொலைபேசியில் அழைத்தாலும் எடுக்கப்படுவதில்லை என்று குறிப்பிட்டு நிர்வாகத்திடம் புகார் கடிதம் கொடுத்துள்ளார். இதே குற்றச்சாட்டின் பேரில் இது குறித்து விசாரணை செய்வதற்காக குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டு மனுதாரருக்கு முறையான அறிவிப்பும் அனுப்பப்பட்டுள்ளது. விசாரணை

அதிகாரி முதல் நாளில் மனுதாரரிடம் அவர் மீதான குற்றச்சாட்டுகள் விவரத்தை தெரிவித்தபோது அதற்கு மனுதாரர் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுப்பதாக கூறியுள்ளார். உள்துறை விசாரணை இயற்கை நீதி முறைப்படி நடைபெறும் என்றும் ஆவணங்கள் பெறுவதற்கும், சாட்சிகளை விசாரிக்கப்படுவதற்க்கும், குறுக்கு விசாரணை செய்வதற்கும் வாய்ப்பு அளிக்கப்படும் என்ற விவரத்தை மனுதாரரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் நகல் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நகல்களை பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டு மனுதாரர் கையொப்பம் செய்துள்ளார். நிர்வாகத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியிடம் மனுதாரர் விரிவான குறுக்கு விசாரணையும் செய்துள்ளார். அதே போல் மனுதாரர் விரிவான வாக்குமூலத்தை அளித்த நிலையில் நிர்வாகத்தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது. நிர்வாகத்தரப்பில் ஒரு சாட்சியை விசாரிக்கப்பட்ட நிலையில் மனுதாரர் தரப்பில் அவரே சாட்சியத்தை அளித்த நிலையில் அத்துடன் விசாரணை நடவடிக்கைகள் முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக மனுதாரர் திரு. வேல்முருகன் என்பவரிடம் கடன் வாங்கியதாக குறிப்பிட்டு அந்த கடனை திருப்பி செலுத்திவிட்டதாக குறிப்பிட்டு தன்னுடைய வங்கி பாஸ்புக்கின் ஸ்டேட்மென்ட் நகல் ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். விசாரணை நடவடிக்கையின் போது விசாரணை அதிகாரி நிர்வாகத்திற்கு சாதகமாக செயல்படுவதாகவோ அல்லது சாட்சிகள் அளிக்கும் வாக்குமூலத்தை நிர்வாகத்திற்கு சாதகமாக பதிவு செய்ததாகவோ எந்தவிதமான ஆட்சேபனையையும் விசாரணை காலத்தில் மனுதாரரால் செய்யவில்லை. மனுதாரர் மீது புகார் கொடுத்த வேல்முருகன் என்பவர் தான் நிர்வாகத்தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். ஆரம்பத்தில் விசாரணை செய்த விசாரணை அதிகாரி திரு.அருணாச்சலம் என்பவர் இடையில் மரணம் அடைந்துவிட்ட நிலையில் புதிய விசாரணை அதிகாரியாக திரு.ஜேசுநாயகம் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் விசாரணையை தொடர்ச்சியாக செய்யப்பட்ட போதும் மனுதாரர் தரப்பில் எந்தவிதமான ஆட்சேபனையும் செய்யப்படவில்லை. விசாரணை அதிகாரி தன்னுடைய விசாரணையை முடித்துக்கொண்டு முடிவு அறிக்கை வழங்கியுள்ளார். அந்த விசாரணை முடிவு அறிக்கை நகல் நி.த.சா.ஆ.23 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாட்சிகள் தாக்கல் செய்த ஆவணங்கள் ஆகியவற்றை விரிவாக பரிசீலனை செய்து தன்னுடைய முடிவு அறிக்கை வழங்கியுள்ளார். அந்த முடிவு அறிக்கையில் தொழிற்சாலையின் சான்றாளிக்கப்பட்ட விதிகளின்படி மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

12. நடத்தப்பட்ட விசாரணை நடவடிக்கைகள் குறிப்புகளை பரிசீலித்த வகையில் மனுதாரர் ஒவ்வொரு விசாரணையின் போதும் சக தொழிலாளியுடன் ஆஜராகியுள்ளார். விசாரணை நடவடிக்கைகளில் மனுதாரருக்கு போதுமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விசாரணை நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் நடத்தப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கைகள் குறித்து மனுதாரர் அப்போது எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை. விசாரணை முடிவு அறிக்கை தனக்கு சாதகமாக இல்லாத நிலையில் நிர்வாகத்தரப்பில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்டதன் பிறகு தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தாக்கல் செய்த தொழிற்தாவா மனுவில் விசாரணை அதிகாரி ஒருதலைபட்சமாக நடந்துக்கொண்டார் என்று கூறியுள்ளார். விசாரணை நடவடிக்கை குறிப்புகளை முழுமையாக பரிசீலிக்கையில் விசாரணை அதிகாரி மனுதாரரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது நிர்வாகத்தரப்புக்கு சாதகமாக ஒருதலைபட்சமாக செயல்பட்டார் என்று கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லை. விசாரணை அதிகாரி சாட்சிகள் வாக்குமூலத்தை முறையாக பதிவு செய்யவில்லை என்பதற்கும் ஆதாரங்கள் இல்லை. விசாரணை நடவடிக்கை முறையாகவும், சட்டப்படியும், மனுதாரருக்கு போதிய வாய்ப்பு அளித்தும் நடத்தப்பட்டுள்ளது. இயற்கை நீதி கோட்பாடுக்கு முரணாக விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கு எந்தவிதமான ஆதாரங்கள் காணப்படவில்லை. எனவே மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்துறை விசாணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதாகவே தெரிய வருகின்றது.

எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள்

முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதாகவே இந்த முதல்நிலை விசாரணைக்கான தீர்வமாக முடிவு காணப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

**<u>இரு தரப்பிலும் சாட்சிகள்</u>** - இல்லை.

**<u>மனுதாரர்/தொழிலாளி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.1 | 27.12.2019 | காரணம் கோரும் அறிவிப்பு கடித நகல். |
| தொ.த.சா.ஆ.2 | 16.11.2020 | உள்விசாரணை அறிவிப்பு கடித நகல். |
| தொ.த.சா.ஆ.3 | 23.11.2020 | உள்விசாரணை அறிவிப்பு கடித நகல். |
| தொ.த.சா.ஆ.4 | 30.11.2020 | உள்விசாரணை அறிவிப்பு கடித நகல். |
| தொ.த.சா.ஆ.5 | 21.01.2020 | விசாரணை குறிப்புகள் நகல். |
| தொ.த.சா.ஆ.6 | 17.12.2020 | உள்விசாரணை அறிக்கை நகல். |
| தொ.த.சா.ஆ.7 | 11.01.2021 | 2வது காரணம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் கொடுத்த பதில் கடித நகல். |
| தொ.த.சா.ஆ.8 | 29.01.2021 | 3வது காரணம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் கொடுத்த பதில் கடித நகல். |
| தொ.த.சா.ஆ.9 | 27.02.2021 | பணிநீக்க உத்தரவு நகல். |

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.10 | 19.11.2019 | வேல்முருகன் என்பவர் நிர்வாகத்திற்கு கொடுத்த கடித நகல். |
| தொ.த.சா.ஆ.11 | 05.12.2019 | வேல்முருகன் என்பவர் கொடுத்த புகார் நகல். |
| தொ.த.சா.ஆ.12 | 11.12.2019 | வேல்முருகன் என்பவரின் Account Statement நகல். |

**<u>எதிர்மனுதாரர்/நிர்வாக தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| நி.த.சா.ஆ.1 | 19.11.2019 | வேல்முருகன் என்பவர் நிர்வாகத்திடம் கொடுத்த புகார் நகல். |
| நி.த.சா.ஆ.2 | 05.12.2019 | வேல்முருகன் என்பவர் புதுச்சேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நகல். |
| நி.த.சா.ஆ.3 | 06.12.2019 | மனுதாரருக்கு கொடுத்த தற்காலிக பணியிட நீக்கம் கடித நகல். |
| நி.த.சா.ஆ.4 | 27.12.2019 | எதிர்மனுதாரர் கொடுத்த காரணம் கோரும் அறிவிப்பு நகல். |
| நி.த.சா.ஆ.5 | 3012.2019 | மனுதாரரின் பதில் கடிதம நகல். |
| நி.த.சா.ஆ.6 | 11.01.2020 | உள்விசாரணை அறிவிப்பு கடித நகல். |
| நி.த.சா.ஆ.7 | 21.01.2020 | முதல் நாள் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |
| நி.த.சா.ஆ.8 | 31.01.2020 | இரண்டாம் நாள் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |
| நி.த.சா.ஆ.9 | 25.02.2020 | வேல்முருகன் என்பவர் உள்விசாரணைக்கு ஆஜராகுவதற்கு கொடுத்த அறிவிப்பு கடிதம் நகல். |
| நி.த.சா.ஆ.10 | 17.03.2020 | மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகுமாறு கொடுத்த அறிவிப்பு கடித நகல். |
| நி.த.சா.ஆ.11 | 15.10.2020 | உள்விசாரணை அறிவிப்பு கடித நகல். |
| நி.த.சா.ஆ.12 | 21.10.2020 | 3ம் நாள் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |
| நி.த.சா.ஆ.13 | 31.10.2020 | உள்விசாரணை அறிவிப்பு கடித நகல். |
| நி.த.சா.ஆ.14 | 04.11.2020 | 4ம் நாள் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |

| | | |
|---|---|---|
| நி.த.சா.ஆ.15 | 16.11.2020 | திரு.ஜேசுவிநாயகம் என்பவர் விசாரணை அதிகாரியாக நியமன ஆணை நகல். |
| நி.த.சா.ஆ.16 | 16.11.2020 | இரண்டாம் விசாரணை அதிகாரியாக திரு..ஜேசுவிநாயகம் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்ற தகவலை மனுதாரருக்கு தெரிவிக்கும் கடிதம் நகல். |
| நி.த.சா.ஆ.17 | 18.11.2020 | 5ம் நாள் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |
| நி.த.சா.ஆ.18 | 23.11.2020 | உள்விசாரணை அறிவிப்பு கடித நகல். |
| நி.த.சா.ஆ.19 | 25.11.2020 | 6ம் நாள் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |
| நி.த.சா.ஆ.20 | 30.11.2020 | உள்விசாரணை அறிவிப்பு கடித நகல். |
| நி.த.சா.ஆ.21 | 02.12.2020 | 7ம் நாள் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |
| நி.த.சா.ஆ.22 | 01.04.2019 முதல் 31.12.2019 | வேல்முருகன் என்பவரின் Account Statement நகல். |
| நி.த.சா.ஆ.23 | 17.12.2020 | உள்விசாரணை அறிக்கை நகல். |
| நி.த.சா.ஆ.24 | 28.12.2020 | விசாரணை அதிகாரியின் முடிவு அறிக்கை நகல். |
| நி.த.சா.ஆ.25 | 04.01.2021 | மனுதாரர் பொது மேலாளருக்கு எழுதிய கடித நகல். |
| நி.த.சா.ஆ.26 | 07.01.2021 | மனுதாரரின் கடிதத்திற்கு எதிர்மனுதாரர் அளித்த பதில் கடித நகல். |
| நி.த.சா.ஆ.27 | 11.01.2021 | மனுதாரரின் பதில் கடித நகல். |
| நி.த.சா.ஆ.28 | 21.01.2021 | மனுதாரருக்கு கொடுத்த 2வது காரணம் கோரும் அறிவிப்பு நகல். |
| நி.த.சா.ஆ.29 | 25.01.2021 | மனுதாரர் கூடுதல் கால அவகாசம் கோரி நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| நி.த.சா.ஆ.30 | 28.01.2021 | மனுதாரர் கடிதத்திற்கு எதிர்மனுதாரர் அளித்த பதில் கடித நகல். |
| நி.த.சா.ஆ.31 | 29.01.2021 | மனுதாரர் கொடுத்த பதில் கடித நகல். |

நி.த.சா.ஆ.32 27.02.2021 பணி நீக்க உத்தரவு நகல் மற்றும் காசோலை நகல்.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

// உண்மை நகல் //

P SIVAGNANAM
Presiding Officer, Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2023.03.29 16:40:58 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்.